Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 40

வெள்ளிக்கிழமை
05 ஜனவரி 2024

மார்கழி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"வாய்ப்பந்தல்
போடுறதில ரணில்
கடும் விண்ணன் தான்
பாருங்கோ"



## 2025ஆம் ஆண்டுக்குள்

# இடம்பெயர்ந்தோர் என எவரும் இருக்கக்கூடாது

### யாழில் வைத்து ரணில் நேற்றுத் தெரிவிப்பு
### பரந்துபட்ட காணிவிடுவிப்புக்கும் உத்தரவு

**யாழ்ப்பாணம், ஜனவரி 5**

**வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்குள் இடம்பெயர்ந்தோர் பிரச்சினை என்பதே இருக்கக்கூடாது என்று அறிவுறுத்தியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. பலாலி உள்ளிட்ட பகுதிகளில் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ள காணிகளை விடுவிக்குமாறும் அவர் தெரிவித்தார்.**

11

## பலாலிக் காணிகளுக்கு பெப்ரவரியில் முடிவாம்!

யாழ்ப்பாணம், ஜன. 5

பலாலியில் தீர்க்கப்படாதுள்ள பல காணிகளுக்கு பெப்ரவரி மாதத்தில் இறுதிமுடிவு எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

வடமாகாணத்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற

11

## ரணில் வருகை: போராட தடை!

வவுனியா, டிசெ. 5

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வவுனியா மாவட்டத்துக்கு இன்று செல்லவுள்ள நிலையில், அவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடும் என்று கருதப்படும் சிலருக்கு நீதிமன்றத்தின் ஊடாகத் தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கங்களின் தலைவர், செயலாளர்கள் ஆகியோருக்கு எதிராகவே குறித்த தடை உத்தரவு பெறப்பட்டிருந்ததுடன் அதன் பிரதிகள் நேற்று அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

11

## வடக்கில் வலுசக்தி ஏற்றுமதி

### பூநகரியே கேந்திரநிலையம்
### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

வடமாகாணத்தில் வலுசக்தியைப் பாதுகாத்து - பலப்படுத்தி வலுசக்தி ஏற்றுமதி செய்யப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

11

## ரணிலின் யாழ். வருகை: வீடுகளிலும் சோதனை!

யாழ்ப்பாணம், டிசெ. 5

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு வந்திறங்கிய நிலையில், அவரின் வருகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

11

## அரச ஊழியர்களுக்கு தித்திக்கும் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 5

எதிர்வரும் தைப்பொங்கலின் பின்னர் அரச ஊழியர்களுக்குச் சலுகைகளும், நிவாரணங்களும் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

11

### இலங்கையின் ஒற்றையாட்சிக்கு
## காவலர்கள் பிக்குகளே!
### குணதாஸ அமரசேகர தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 5

பௌத்த பிக்குகளே இந்தநாட்டில் ஒற்றையாட்சியின் காவலர்களாக இருந்துவருகின்றனர். இலங்கை சமஷ்டி நாடாவது அவர்களின் அழுத்தத்தால்தான் தடுக்கப்பட்டுவருகின்றது. இவ்வாறிருக்கையில் தமிழ்ப் பிரிவினைவாதிகள் தற்போது பிக்குகளின்

11

## வடக்கிலிருந்து 18,641 பரீட்சார்த்திகள்

யாழ்ப்பாணம், ஜன. 5

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு வடக்கிலிருந்து 18 ஆயிரத்து 641 பரீட்சார்த்திகள் தோற்றியிருக்கின்றனர் என்று வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகின. இந்தப் பரீட்சைக்கு வடக்கிலிருந்து 15 ஆயிரத்து 206 பாடசாலைப் பரீட்சார்த்திகளும்,

11

## போதைப்பொருளுடன் காதல் ஜோடி கைது

வவுனியா, ஜன. 5

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேகத்தின் அடிப்படையில் காதல் ஜோடியொன்று கைதுசெய்யப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே அந்தக் காதல்ஜோடி கைது செய்யப்பட்டுள்ளது. அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது கஞ்சா, ஐஸ் போதைப்பொருள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்தனர்.

(அ-ம-110)

## ஒக்ரோபர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல்

ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவரான அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'ஜனவரி மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு முன்கூட்டியே பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளது என வெளியாகும் தகவல்களில் உண்மைத் தன்மை இல்லை. எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும்' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-ம-44)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'யுக்திய' நடவடிக்கையால் சிறுவர்களுக்குப் பாதிப்பு



## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.5**

**நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையின் ஊடாக பெற்றோர் கைது செய்யப்படும்போது, அவர்களது வீடுகள் பாதுகாப்பற்றதாக மாறுகின்றன என்றும், அது சிறுவர்கள் பாதாள உலக குழுக்களில் இணைவதற்கும், விபசாரத்தில் ஈடுபடுவதற்கும் வழி சமைக்கிறது என்றும் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு பகுதியில் பெற்றோர் கைது செய்யப்படும் போது அவர்களின் பிள்ளைகளுக்கு உணவு மற்றும் பாதுகாப்பை வழங்குவதற்கு எவரும் அற்ற நிலை உருவாகியுள்ளது.

அதேநேரம், பிரதான சந்தேகநபர்களின் பெயர்கள் பெரும்பாலும் ஊடகங்களில் வெளியாகியிருந்த போதும் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை. யுக்திய சுற்றுவளைப்பு நடவடிக்கையின் முடிவு தொடர்பாக ஜனாதிபதி கரிசனை செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# இத்தாலியிலிருந்து போதைப்பொருள்!

## சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜன. 5

இத்தாலியிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த பொதியொன்றிலிருந்து 4 கிலோ போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று சுங்கத்திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இத்தாலியிலிருந்து, ஹோமாகம பகுதியிலுள்ள முகவரிக்கு இந்தப் பொதி அனுப்பப்பட்டுள்ளது.

பொதியிலிருந்து, சுமார் 4 கிலோகிராம் நிறையுடைய, 61 மில்லியன் ரூபா பெறுமதியான ஹஷீஸ் ரக போதைப்பொருள் மீட்கப்பட்டது.

இந்நிலையில், அந்தப்பொதியை பொறுப்பேற்க வந்தவர் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ஜெரோமுக்கு பிணை



கொழும்பு, ஜன. 5

மதங்களை இழிவுபடுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு பிணை வழங்கியது கொழும்பு கோட்டை நீதிமன்று.

ஆயினும் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு நீதிமன்றத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கடந்த டிசெம்பர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ச-இ)

# பாடசாலையில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 5

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் சி.சி.ரி.வி. கமெரா, 17 ஆயிரம் ரூபா பணம் மற்றும் கணினி என்பன களவாடப்பட்டுள்ளன.

பாடசாலைக்கு நேற்றுமுன்தினம் சென்ற நிர்வாகத்தினர் பாடசாலை உடைக்கப்பட்டு பொருள்கள் மற்றும் பணம் என்பன களவாடப்பட்டதை அவதானித்தனர். சம்பவம்தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-27)

# காலி சிறையில் கைதி உயிரிழப்பு

கொழும்பு. ஜன. 5

காலி சிறைச்சாலையில் கைதி ஒருவர் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார்.

காலி, கராபிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கைதியே உயிரிழந்துள்ளார் என்று சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த கைதி கடந்த டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி கொள்ளைச் சம்பவ குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# போதைப்பொருள் தகவல்: வழங்க தனியான இலக்கம்

கொழும்பு. ஜன. 5

போதைப்பொருள் விற்பனை, கடத்தல் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கென தனியான தொலைபேசி இலக்கமொன்றை பொலிஸ் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி 0718598800 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு போதைப்பொருள் பாவனை பற்றிய இரகசிய தகவல்களை வழங்கலாம்.

இந்த இலக்கத்தை முச்சக்கர வண்டிகளில் காட்சிப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

# கடலாமை இறைச்சி: சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 5

சட்டவிரோதமாகக் கடலாமை இறைச்சியை வைத்திருந்த குற்றச்சாட்டில் 54 வயதுடைய நபர் நாவற்குழியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 14 கிலோ 800 கிராம் எடையுடைய கடலாமை இறைச்சி மீட்கப்பட்டது. (ஒ-27)

# கடத்தலைத் தடுப்பதற்கு அமெ.வுடன் ஒப்பந்தம்

கொழும்பு. ஜன. 5

சட்டவிரோதமாக அணு உற்பத்திச் சாதனங்கள் மற்றும் அணு மூலப்பொருள்கள் கடல்வழியாக கடத்தப்படுவதைத் தடுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் அமெரிக்க அணுப்பாதுகாப்பு நிர்வாக சபையுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் குழு, இலங்கை அணுசக்தி சபை, வெளிவிவகார அமைச்சு என்பன இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பரிசீலித்துள்ள நிலையில் சட்டமா அதிபர் திணைக்களமும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது. (ச-6)

# ஆயிரம் பேர் நேற்றுக்கைது



கொழும்பு, ஜன.5

யுக்திய நடவடிக்கையின்போது நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் ஆயிரத்து 38 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 67 பேர் தொடர்பில் தடுப்புக்காவல் உத்தரவுக்கு அமைய மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. போதைக்கு அடிமையான 43 பேர் புனர்வாழ்வுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து 417 கிராம் ஹெரோயின், 205 கிராம் ஐஸ் மற்றும் 722 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# போதைப்பொருள் ஒழிப்பு யாழில் திருப்தியில்லை

## பொலிஸாரைச் சாடும் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள் வியாபாரம் மற்றும் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிருப்தி வெளியிட்டுள்ளார். வடக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவை பற்றிய நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடையே 'ஸூம்' ஊடாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்குறித்த விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

போதைப்பொருள் பாவனைக்கு எதிராக யாழ். மாவட்டத்தில் பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் அணுகுமுறைகளும் அதிருப்தியையும் சந்தேகங்களையும் ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ள அமைச்சர், சில சந்தர்ப்பங்களில் போதைப்பொருள் வியாபாரிகள் தப்பித்துக் கொள்வதற்கான கால அவகாசத்தை பொலிஸார் வழங்கியதான சந்தேகம் மக்கள் மத்தியில் இருப்பதையும் சுட்டிக்காட்டினார். (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுக்குத் திண்டாடும் 43 வீத இலங்கையர்கள்

கொழும்பு, ஜன. 5

**இலங்கையில் 43 சத வீதமான மக்கள் உணவுப்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு சிரமப்படுவதாக உலக உணவு நிறுவனம் தெரிவித்துள்ளது.**

கடந்த ஆண்டு இறுதியில் வெளியான அந்த அறிக்கையில், இலங்கையில் 27 சதவீதமான மக்கள் கடன்பட்டு உணவுப்பொருள்களைக் கொள்வனவு செய்கின்றனர். பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தமது சொத்துக்களை விற்பனை செய்கின்றன.

கடன் வாங்குதல், கடனுக்கு உணவை வாங்குதல், கடனை செலுத்துவதைத் தவிர்த்தல், உணவு வாங்க நகைகளை விற்பது, கல்வி மற்றும் சுகாதாரத்துக்கான செலவைக் குறைத்தல்மற்றும்வீட்டுச்சொத்துகளை விற்பது போன்ற ஆறு வாழ்வாதார அடிப்படையிலான சமாளிப்பு உத்திகளை இலங்கை மக்கள் கையாளத்தொடங்கியுள்ளனர். (ஒ-6)

## மின்சாரசபை ஊழியர்கள் 2ஆவது நாளாகப் போராட்டம்

கொழும்பு, ஜன.5

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள மின்சார சபையை மறுசீரமைக்கும் சட்ட வரைவுக்கு எதிர்ப்புத்தெரிவித்து மின்சாரசபை ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று வியாழக்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது. மின்சார சபையின் பிரதான அலுவலகத்துக்கு எதிரே நேற்று முன்தினம் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

உத்தேச சட்ட வரைவின் ஊடாக மின்சாரசபையை 12 நிறுவனங்களாகப் பிரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனஎன்று ஒன்றிணைந்தமின்சாரத்துறை தொழிற்சங்கத் தலைவர் ரஞ்சன் ஜயலால் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-இ)

## மின்சாரம், எரிபொருள் அத்தியாவசிய சேவை

### வர்த்தமானி வெளியீடு

பல்வேறு சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதியின் செயலாளரால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டது. மின்சார விநியோகம் தொடர்பான அனைத்துச் சேவைகள் மற்றும் எரிபொருள் வழங்கல்,விநியோகம் என்பன அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. (ச-இ)

## மின்சார ஊழியர்களின் விடுமுறைகள் 'கட்'

கொழும்பு, ஜன. 5

இலங்கை மின்சாரசபையின் அனைத்து ஊழியர்களின் விடுமுறையையும் இரத்துச் செய்து விசேட சுற்றறிக்கை ஒன்றை மின்சாரசபை வெளியிட்டுள்ளது.

சபையின் பதில் பொது முகாமையாளர் பொறியியலாளர் நரேந்திர டி சில்வா இந்தச் சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளார். மின்சார விநியோகம் அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்யப்பட்டதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## முதல் காலாண்டு இறுதியில் வரிச்சுமை குறைக்கப்படும்!

### கூறுகிறார் வர்த்தக அமைச்சர்

கொழும்பு, ஜன. 5

இந்த ஆண்டு சாதகமான பொருளாதார வேகத்துடன் ஆரம்பமாகின்றமையால் இந்த வருடத்தின் முதல் காலாண்டு இறுதிக்குள் மக்கள் மீதான சுமை 75 வீதத்தால்குறைக்கப்படும்என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். வரி விதிப்பு தவறு என்று யாராவது கூறினால், அவர் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எதிரானவரே. 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சதொசவால் 5 புதிய மெகா விற்பனை நிலையங்களையும் சாதாரண் 10 லங்கா சதொச விற்பனை நிலையங்களையும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வருட இறுதிக்குள் லங்கா 'சதொச' விற்பனை நிலைய வலையமைப்பை 500 ஆக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகாரசபைக்கான வேலைத் திட்டம் இந்த வருடத்துக்குள் ஆரம்பிக்கப்படும். அதனால் நுகர்வோர் உரிமைகள் மேலும் பாதுகாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## கொழும்பு போர்ட்சிற்றியில் இரு முதலீட்டுத் திட்டங்கள்

கொழும்பு, ஜன. 5

கொழும்புத் துறைமுக நகரத்தில் இரண்டு முதலீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் தனியார் மருத்துவமனையொன்றையும் 100,000 அமெரிக்க டொலர் ஆரம்ப அந்நிய நேரடி முதலீட்டில் தகவல் தொழில்நுட்ப வணிகத்தைத் தொடங்குவதற்கு மென்பொருள் தனியார் நிறுவனத்தையும் ஆரம்பிப்பதற்கு முன்வைத்த முன்மொழிவுகளுக்கே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## இடையூறு விளைவித்தால் ஒழுக்காற்று நடவடிக்கை

### எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

நிர்வாகப் பணிகள், செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் சபை ஊழியர்களுக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கை பாயும் என்று இலங்கை மின்சாரசபைக்கு எச்சரித்துள்ளார் அமைச்சர் காஞ்சன விஜயசேகர.

இலங்கை மின்சாரசபையின் உத்தேச சீர்திருத்தங்கள் ஒப்புதலுக்காக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. மின்சாரசபையின் இரகசியத் தகவல்களை வெளிப்படுத்துவது, அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு விடயங்களை சமூக ஊடகங்களில் பதிவிடுவது என்பவை மின்சாரசபையின் ஒழுக்க விதிகளுக்கு முரணானவை. அந்தவகையில் இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் சமூக ஊடகத்தை பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## ப தினம் தெரியுமோ?

ஆரிட்டைப் பொய் சொன்னாலும் டொக்டரிட்டையும்,லோயரிட்டையும் பொய்யே சொல்லக்கூடாது எண்டுவினம். ஆனால் உலகத்திலேயே கூடப் பொய் சொல்லுறது இந்த டொக்டர்ஸும், லோயர்மாரும் தான் எண்டுறதுதான் சனத்தின்ர அபிப்பிராயம். நன்மைக்காகச் சொல்லுற பொய் கூட உண்மையை விட உயர்ந்ததுதான். ஆனால் சிலநேரங்களில சிக்கலான விசயங்களை மறைக்கிறதுக்காக உண்மையைப் பொய்யாக்கிறது நல்லதில்லை.

முந்தநாள் வவுனியாவில ஒருத்தர் திடீரெண்டு செத்துப்போட்டார். அநுராதபுரத்தில இருந்து அவரைக் காய்ச்சல் எண்டு வவுனியா ஹொஸ்பிட்டலில சேர்த்திருக்கினம். அதுக்குப் பிறகுதான் அவருக்குத் திடீரெண்டு மூச்சடைப்பு வந்து செத்திருக்கிறார். அவரின்ர சாவில டொக்டர்மாருக்குச் சந்தேகம். 'கொரோனாவா இருக்குமோ?'எண்ட சந்தேகத்தில தாங்களாவே, செத்தவருக்கு அண்டிஜென் சோதினை செய்து பார்த்திருக்கினம். அப்பிடிச் சோதிச்சுப் பார்க்கேக்க செத்தவருக்கு கொரோனா தான் எண்டு ரிசல்ட் காட்டினதாம். அதை செத்தவரின்ர சொந்தக்காரருக்கும் சொல்லியிருக்கினம். அண்டிஜென் சோதினையை விட பி..சி.ஆர் சோதினையிலதான் கொரோனா பற்றி உறுதியான முடிவையெடுக்கலாம். அதுக்காக செத்தவரின்ர உடம்பில இருந்து 'சாம்பிளும்' எடுத்து கொழும்புக்கு அனுப்ப வெளிக்கிட்டிருக்கினம்.

இப்பிடியெல்லாம் நடக்குது எண்டு மேல்மட்டங்களுக்கு தகவல் போக, அவை பதறத் தொடங்கிட்டினமாம். ' இப்ப ஆருக்கும் அண்டிஜெனோ, பி.சி.ஆரோ செய்யக்கூடாது எண்டு அரசாங்கம் 'உள்ளுக்கால'எல்லாருக்கும் கடுமையான ஓர்டர் போட்டு வைச்சிருக்கு. அதை மீறி என்னெண்டு நீங்கள் அண்டிஜென் எடுப்பியள்? ஆரைக் கேட்டு அவருக்கு கொரோனா எண்டு சொல்லுவியள்' எண்டு ஊரிப்பட்ட கேள்வியளைக் கேட்டு மேல்மட்டக்காரர் . பி.சி.ஆர். சோதினைக்கு 'சாம்பிளை' அனுப்பவிடாமல் நிப்பாட்டிப் போட்டினம்.

'நாளைக்கு ரணில் இஞ்சால வரப்போறார். இப்பிடியான நிலைமையில கொரோனாவால ஒராள் செத்திட்டார் எண்டால் அது இன்னொரு சிக்கலாப் போடும்' எண்டும் அவை சொல்லியிருக்கினம். இதாலதான் பிறகு அவர் கொரோனாவால சாகேலை, நிமோனியாக் காய்ச்சலாலதான் செத்தவர் எண்டு ஹொஸ்பிட்டல்காரர் அறிவிச்சவையாம். ஒருவேளை அவர் உண்மையாவே நிமோனியாவால செத்திருந்தாலும், பி.சி.ஆர். சோதினையைச் செய்து பார்த்திருக்கலாமே. எல்லாருக்கும் இப்பிடிச் சோதினை செய்யாமல் விட்டால் தான் அது சிக்கலாப் போடும். ஏனெண்டால் இப்ப இந்தியாவில கொரோனாவால சாகிற ஆக்களின்ர எண்ணிக்கை திரும்பக் கூடிக்கொண்டு வருகுது. இஞ்சையும் அந்தக் கொரோனாத் திரிபு வந்திட்டெண்டு அறிஞ்சால், நாங்களும் முன்னெச்சரிக்கையா இருக்கலாமெல்லோ. அதைவிட்டுட்டு இப்பிடி ஒளிப்பு மறைப்புச் செய்யிறது சனத்துக்குச் செய்யிற துரோகம் கண்டியளோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் 2024

## சிம்மம்

நல்லதோ, அல்லதோ முடிவெடுத்து விட்டால் முன் வைத்த காலைப் பின் வைக்காமல் முடித்துக் காட்டுவதில் வல்லவர்கள். எங்கும் எதிலும் முதலிடம் பிடிக்க எண்ணும் நீங்கள், யாருக்காகவும் எதற்காகவும் உங்களின் கொள்கையை விட்டுக்கொடுக்கமாட்டீர்கள்.

உங்கள் ராசிக்கு புதனும், சுக்ரனும் சாதகமான வீட்டில் நின்றுகொண்டிருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் நண்பர்களின் உதவி கிடைக்கும். காற்றோட்டம், தண்ணீர் வசதி அதிகமுள்ள வீட்டுக்கு மாறுவீர்கள். நிலுவையில் இருந்த வழக்கில் நல்ல தீர்ப்பு வரும்.

உங்கள் ராசியிலேயே இந்தாண்டு பிறப்பதால் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டி வரும். அடுக்கடுக்காக செலவுகள் இருக்கும் என்றாலும் அதற்கேற்ற வருமானமும் உண்டு. அடிக்கடி உடல் நிலை பாதிக்கும்.

உங்கள் ராசியை குருபகவான் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் தொட்ட காரியங்கள் துலங்கும். குடும்பம் இன்ப மயமாகும். புகழ், கௌரவம் கூடும். வேலை கிடைக்கும். சொந்த பந்தம் மதிக்கும்படி பெரிய பதவிகளும் தேடி வரும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். வெளிநாட்டுப் பயணம் நீங்கள் எதிர்பார்த்தபடி அமையும். அக்கம் பக்கம் வீட்டாருடன் இருந்த மோதல் நீங்கும். மனைவி பிள்ளைகளுடன் பேசி மகிழவும் நேரம் ஒதுக்குவீர்கள்.

30.04.2024 வரை உங்கள் ராசிக்கு 9ம் வீட்டில் குரு நிற்பதால் எதிர்பார்த்த வகையில் பணம் வரும். தந்தையாரின் உடல் நிலை சீராகும். வங்கியில் வாங்கியிருந்த கடனை அடைப்பீர்கள். ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் உதவுவார்கள். கோயில் கும்பாபிஷேக திருப்பணி கமிட்டியில் இடம் பிடிப்பீர்கள். தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். 01.05.2024 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 10ம் வீட்டில் குருபகவான் தொடர்வதால் எதிலும் அலட்சியமாக இல்லாமல் முன்யோசனையுடன் செயற்படப்பாருங்கள். அடுத்தவர்களை தாக்கிப் பேச வேண்டாம். முக்கியமான வேலைகளை பிறரை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது. குடும்ப அந்தரங்க விஷயங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். பிள்ளைகளின் நட்பு வட்டங்களைக் கண்காணியுங்கள்.

ஆண்டு முழுவதும் ராகு பகவான் உங்கள் ராசிக்கு 8வது வீட்டில் வந்தமர்கிறார். கேது பகவான் 2வது வீட்டில் வந்தமர்கிறார். தந்தையார் ஸ்தானத்தை விட்டு ராகு விலகுவதால் அவருடன் இருந்த மனக்கசப்புகள் விலகும். கேதுவால் வாக்குவாதங்கள் இருக்கும். யாருக்கும் உறுதிமொழி தர வேண்டாம்.

இந்த ஆண்டு முழுவதும் 7ம் வீட்டில் சனிபகவான் தொடர்வதால் கணவன் மனைவிக்குள் குழப்பத்தை ஏற்படுத்த சிலர் முயற்சி செய்வார்கள். எச்சரிக்கையாக இருக்கவும்.

**வியாபாரிகளே!** தேங்கிக்கிடந்த சரக்குகளை சாமர்த்தியமாக விற்றுத் தீர்ப்பீர்கள். அதிரடி லாபங்களும் உண்டாகும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும்.

**உத்தியோகஸ்தர்களே!** பதவி உயர்வு கிடைக்கும். எல்லோரும் மதிப்பார்கள். மேலதிகாரியின் ஒத்துழைப்பு இனி கிடைக்கும். காலம் தாழ்த்தாமல் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இந்த புத்தாண்டு கட்டுக்கடங்காத செலவுகளை தந்து, கடினமாக உழைக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளினாலும், மற்றொரு பக்கம் மகிழ்ச்சியையும், வெற்றியையும் தருவதாக அமையும்.**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் புது உத்தியைக் கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு பாராட்டுக் கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**இடபம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உறவினர்களின் அன்புத்தொல்லை குறையும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள்.

**மிதுனம்:** தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும்.

**கடகம்:** குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்துப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். விருந்தினர் வருகையை அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும்.

**சிம்மம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் குறைவார்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**துலாம்:** அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுடன் விவாதம் வேண்டாம். முன்னேறும் நாள்.

**விருச்சிகம்:** உங்களுடைய ஆலோசனை கள் எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். ஒத்து ழைப்பு அதிகரிக்கும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம்விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். சாதிக்கும் நாள்.

**மகரம்:** உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும்.

**கும்பம்:** உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**மீனம்:** பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். புது நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

# செங்கடலை பாதுகாக்க இலங்கைக் கடற்படை!

கொழும்பு, ஜன.5

செங்கடல் பாதுகாப்பு நடவடிக்கைக்காக இலங்கைக் கடற்படை கப்பலை அனுப்புவதற்கு உடன்பட்டுள்ளோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உக்ரைன் போர் நடைபெறுகிறது. காஸா போர் நடக்கின்றது. அதனால் பொருள்களின் விலை அதிகரிக்கலாம். செங்கடலில் கப்பல்கள் மீது கௌதி குழுவினர் நடத்தும் தாக்குதல்களால் கப்பல் போக்குவரத்து ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கப்பல்கள் செங்கடல் ஊடாகப் பயணிக்காமல் தென்னாபிரிக்காவின் ஊடாகச் சுற்றி வந்தால் அதன்மூலம் பொருள்களின் விலை அதிகரிக்கும்.

கௌதி அமைப்பின் நடவடிக்கைகளுக்கு எதிரான பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு ஆதரவாக இலங்கைக் கடற்படையின் கப்பலை செங்கடலுக்கு அனுப்ப உடன்பட்டுள்ளோம் என்று அவர் தெரிவித்தார். அதேவேளை, செங்கடலைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா தலைமையில் கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (எ-44)

# பாதுகாப்பு பேச்சு

கொழும்பு, ஜன.5

இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான நான்காவது பாதுகாப்புப் பேச்சு நேற்றுமுன்தினம் கொழும்பில் உள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் நடைபெற்றது.

இலங்கை பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன இலங்கைக் குழுவுக்குத் தலைமைதாங்கினார். பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலர் லெப்டினன்ட் ஜெனர் ஹமூத் உஸ் ஜமான் கான் அந்த நாட்டுக் குழுவுக்குத் தலைமை தாங்கினார். (எ-இ)

# கௌரவிப்பு நிகழ்வு

கொடிகாமம், ஜன. 5

மன்னார் மாவட்டச் செயலராக கடமையேற்றுள்ள க. கனகேஸ்வரனை கௌரவிக்கும் நிகழ்வு கொடிகாமம், நட்சத்திரமஹால் மண்டபத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி மக்களும் பொது அமைப்புகளும் இணைந்து நடத்தும் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இன்னொரு குருதிச்சகதியா?

புத்தாண்டுப்பிறப்புடன் நாட்டு மக்களின் வாழ்வாதாரச் சுமை அதிகரித்துவிட்டது. ஏற்கனவே அல்லாடிக்கொண்டிருந்த மக்களுக்கு இது மீள முடியாத துன்பத்தைக் கொடுத்திருக்கின்றது. பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கையை வற்வரி அதிகரிப்பு இன்னமும் பெருக்கப்போகின்றது. ஒரு கட்டத்தில் மக்கள் கொதித்தெழும் நிலைமை உருவாகப் போகின்றது. அதுவும் இந்த ஆண்டு தேர்தல்கள் பல நடக்கவிருக்கின்ற நிலையில் மக்களின் உணர்வுகள் வேறு விதமாகவும் திரும்பக்கூடும்.

ஜனநாயகத்தின் பலனாக 51 சதவீதமான மக்கள் இழைத்த தவறின் விளைவுகளை, எஞ்சிய 49 சதவீத மக்களும் சுமக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. இனவாதத்தை முதலிட்ட சிங்களத் தலைவர்களை நாட்டின் தலைவராகத் தெரிவு செய்து அழகுபார்த்த மக்களால், அத்தகைய தலைவர்களை நிராகரித்து வாக்களித்த மக்களும்துன்பப்பட வேண்டியிருக்கின்றது. இவை எல்லாவற்றுக்கு மேலாகவும் தற்போதைய நெருக்கடி நிலைக்கு, மீளமுடியாத பொருளாதாரச் சுமைக்கு காரணமானவர்கள் மீது அரசியல்வாதிகளோ, மக்களோ கொதித்தெழாமை வேதனைக்குரியதாக இருக்கின்றது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் என உயர் நீதிமன்றத்தால் மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச, பஸில் ராஜபக்ச ஆகியோரும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் மற்றும் திறைசேரிச் செயலர் ஆகியோரும் அடையாளப்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களின் தவறான தீர்மானங்களால்தான் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது என்று நீதிமன்றம் கூறியிருந்தது. அதேவேளை, இந்த நாட்டில் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்த 10 ஆண்டுகளிலும் ஊழல், இலஞ்சம் என்பன தலைவிரித்தாடியிருந்தன. மஹிந்தவின் சகோதரர் பஸில் ராஜபக்சவை, 'மிஸ்டர் 10 வீதம் ' என்று அழைக்கும் நிலைமையே இருந்தது. வெளிநாடுகளிடமிருந்து குறிப்பாக சீனாவிடமிருந்து கடனுக்குப் பெற்று இலங்கையில் அமைத்த திட்டங்களால் நாடு வருவாயைப் பெறவில்லை. மாறாக அதற்கு இன்னமும் பணத்தை இறைத்துக்கொண்டிருக்கும் நிலைமையே இருக்கின்றது. இப்படி இந்த நாட்டை மோசமான நிலைமைக்குக் கொண்டு சென்றவர்கள் அடுத்த தேர்தலுக்கு தயாராகும் நிலையில், நாட்டு மக்களோ அடுத்த வேளை உணவுக்கே அல்லற்படும் நிலைமை உருவாகியிருக்கின்றது.

கோத்தாபய ஜனாதிபதியாக இருந்தபோது மக்கள் பசியால் வீதிக்கு இறங்கினர். இறுதியில் அவர் 2022ஆம் ஆண்டு விரட்டப்பட்டார். இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு எதிரான போராட்டங்களைஜனநாயகவழிகளுக்கு [illegible] பம்பாகஒடுக்குகின்றார். 'அரகலய' போராட்டம் மீண்டும் தலைதூக்[illegible]மல் பார்த்துக்கொள்கின்றார். ஆனால், இவையெல்லாம் மக்களின் பட்டினிக்கு முன்பாக காணாமற்போய்விடும். ஏற்கனவே விரக்தி நிலையிலிருந்த மக்களை 'வற்' மேலும் வதைக்கின்றது. இவை எல்லாவற்றுக்கும் அப்பால், வரி அதிகரிப்பு எதுவும் பெரிசாக இல்லை என்றும் வற் தொடர்பில் தேவையற்ற கதைகளைச் சொல்பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்புகளும் மக்களை இன்னமும் கொதிப்படையச் செய்யும். நாட்டில் மீண்டுமொரு 'அரகலயப் போராட்டம்' வெடிப்பதற்கான சூழமைவுகள் கருக்கொண்டு வருகின்றன. இது கடந்த அரகலயவைப்போல் இருக்காது. மிக மோசமான வறுமையால் - பட்டினியால் - வாழ்வதற்காக வேறு வழியின்றி களமிறங்கும் போராட்டக்காரர்களை துப்பாக்கிகளால் கூட அடக்க முடியாது. இந்த நாடு மிக மோசமான **குருதிச்சகதியை சந்திக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதுதான் உண்மை.**




# எதுவுமே செய்யாத ரணிலுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஜன.5**

**அரசியல் கைதிகள் விடுதலையைக்கூட முழுமையாகச் செய்யாது வடக்குக்கு வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ் மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தவேண்டும் என்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி வலியுறுத்தியுள்ளார்.**

காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகளுக்கு நீதி வேண்டி 14 ஆண்டுகள் கடந்தும் போராடிக் கொண்டிருக்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் பயனற்றது என்பது நிரூபிக்கப்பட்ட பின்னரும், அதைப்போன்ற கண்துடைப்புப் பொறிமுறை ஒன்றை மீண்டும் கொண்டுவருகின்றனர்.

ஆனந்தசுதாகரன் உட்பட பல அரசியல் கைதிகள் இன்னமும் சிறையில் இருக்கின்றனர். அரசியல்கைதிகளின் விடுதலையைக்கூட முழுமையாகச் செய்யாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நல்லிணக்கம் என இங்குவருவதை ஏற்கமுடியாது. நல்லிணக்கம் தொடர்பாகச் சிந்திப்பவரானால் அரசியல் கைதிகளை நல்லெண்ண அடிப்படையில் விடுவித்திருக்க வேண்டும்.

எதையும் செய்யாது வடக்குக்கு வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தமிழ் மக்கள் கூட்டாக எதிர்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(எ-125)

# கட்டுநாயக்கவில் புதிய முனையம்

கொழும்பு, ஜன. 5

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நெருக்கடி நிலை காணப்படுவதால் புதிய முனையத்தை உருவாக்கவுள்ளதாக விமான, துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்கான முதற் கட்டப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ-6)

# ஐஸ் கட்டி விலையும் உயர்வு

வற்வரி அதிகரிப்பு நடைமுறைக்கு வந்துள்ள நிலையில் ஐஸ்கட்டியின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மீன்களை பாதுகாப்பதற்காக பயன்படுத்தப்படும் ஐஸ்கட்டிகளின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்படுமென உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். 600 ரூபாவாக இருந்த ஒரு கி[illegible]கிராம் ஐஸ்கட்டியின் விலை இனி 700 ரூபாவாக விற்பனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# விண்வெளிப் பயிற்சிகள் துருக்கியுடன் இணைவு

கொழும்பு, ஜன.5

சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம், துருக்கி விண்வெளி ஆய்வு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்[illegible]ல் கைச்சாத்திடவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய [illegible] இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

இதன்மூலம் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழக மாணவர்கள் துருக்கி விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் சர்வதேச ரீதியில் உள்ளகப் பயிற்சிகளையும் பெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ச-6)

## நாளை

06.01.2024

**சனிக்கிழமை**

**மார்கழி 21**

சுபநேரம் : 03.31 - 05.01

ராகுகாலம் : 09.31 - 11.01

## நாளொரு நல்வார்த்தை

**நீங்கள் செய்துகொண்டிருக்கும் செயலில் உங்களுக்கு விருப்பமில்லை என்றால், தொடர்ந்து அதைச் செய்யவேண்டாம்**

**- ரே பிராட்பரி-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08.07.1943

இறப்பு 05.01.2015

## அமரர் சிதம்பரப்பிள்ளை கனகசிங்கம்

(நொச்சிமோட்டை, ஓமந்தை, வவுனியா)

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் உறவுகள் பேணிடும்
கருணை வடிவமாய் உரிமையாய் உணர்வை
அன்பாய் பகிர்ந்தே விண்ணக வாழ்வை நாடியே - சென்றீர்கள்
ஆண்டுகள் ஒன்பது பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றி பணிந்திடுவோம்.

மனைவி - மலர்மாலை கனகசிங்கம்.

(CS 27325 ) (N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 10 . 1949



மறைவு 03 . 01 . 2024

## அந்தோனிப்பிள்ளை அல்பிரட்

(இளைப்பாறிய உள்ளகக் கணக்காளர், சாவகச்சேரி நகர சபை)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அல்பிரட் (மில்யோகம்) அவர்கள் 03.01.2024 புதன்கிழமை [illegible] இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் [illegible] சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை அக்னஸ் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மேரி துரைசிங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மினி (பப்பி) அவர்களின் அன்புக் கணவரும், டன்ஸ்ரன் (கனடா), நிதர்சினி (நோர்வே), றயேன் (கனடா) ஆகியோரின அன்புத் தந்தையும், பீட்டர் ஜெயராஜா (கனடா), காலஞ்சென்றவர்களான துரை பெனடிக் ரத்தினம், மொனிக்கா, நாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், போல் எட்வேர்ட் (நோர்வே), வேர்ஜினி (கனடா), அனுஷா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிளவுடியா, வியோமிகா (நோர்வே), கிஷானி , ஏஞ்சலினா, அனஸ்ரன் , அன்ரியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், லூசியா நிக்கலாப்பிள்ளையின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நிகழ்வானது, நாளை (06.01.2024) சனிக்கிழமை முற்பகல் 09.45 மணியளவில் பூதவுடல் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 10.00 மணியளவில் புனித நிக்கோலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

தவசிக்குளம், மிருசுவில்.

(CS 53409) S-1

---

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரை அண்டிய பிரதேசங்களில் சிறிய குடும்பமொன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை.

077 102 3824, 077 490 4582

## வேலையாட்கள் தேவை

வாகனங்களுக்கான ரிக்கறிங் வேலை பெயின்ரிங் வேலையில் முன் அனுபவம் இருப்பவர்கள் தொடர்புகொள்ளவும்.

071 080 0298



## அருள் ஞானமிகு உச்சி முருகன் கோயில்

Bridge Street High Wycombe Bucks HP11 2EL.UK

**எமது திருக்கோயிலுக்கு தமிழில் பூசை செய்யக்கூடிய அனுபவமிக்க இரண்டு அருட்சுனைஞர்கள் தேவை.**

இரண்டு வருடங்களுக்கு மட்டும் (அரசாங்க வேலை அனுமதி எடுத்து தரப்படும்) இங்கிலாந்துக்கு வரக்கூடியவர்கள் உங்கள் கடவுச்சீட்டு மற்றும் சான்றிதழ்களுடன் (பிரதிகளுடனும்) நேரடி தேர்வுக்கு சனிக்கிழமை **06.01.2024** முற்பகல் **10.00** மணிக்கு **82, உயரப்புலம், ஆனைக்கோட்டைக்கு (உத்துங்க விநாயகர் கோயிலுக்கு அருகாமையில்)** வரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மேலதிக விபரம் தேவைப்படின்:

**+ 94 77 187 9195**

நிர்வாகத்தினர்

# நினைவஞ்சலிகள்

14ஆம் ஆண்டு 49ஆம் ஆண்டு





மண்ணில் 03.05.1922 விண்ணில் 05.01.2010

அமரர் **கணபதிப்பிள்ளை சபாரத்தினம்**

மண்ணில் 16.03.1927 விண்ணில் 22.12.1974

அமரர் **கனகாம்பிகை சபாரத்தினம்**

அன்பான பப்பா, அம்மா,
நீங்களின்றேல் இப் பூவுலகில் நாங்களில்லை!
இன்பத்திலும் துன்பத்திலும் எம்மை
வாழப் பழக்கியவர்கள் நீங்கள்!
எப்போதும் உங்கள் கண்காணிப்பில் இருப்பது போல்
நிம்மதியான ஒரு பாதுகாப்பு உணர்வு!
எம்மைப் பெற்றவரே! நீங்காத உங்கள் நினைவுகளுடன்,
வாயார அழைக்கின்றோம்! துதிக்கின்றோம்!
பப்பா...... அம்மா .... !!!

இல.05, கல்லடி வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர். 'திலக வாசம்' தபாலக வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 06.12.2023 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**சின்னத்தம்பி மகேந்திரராசா (சந்திரன்)**

(ஓய்வுபெற்ற கூட்டுறவுச் சங்க கணக்காளர்)

தோற்றம் 05.12.1966

மறைவு 06.12.2023

வானும் கனல் சொரிந்த நாளொன்றில்
காலனவன் உங்களைக் கவர்ந்து சென்று
முற்பத்தொரு நாள்கள் ஆனதோ அப்பா!
தேனாகச் சுரந்திடும் உங்கள்
அன்பும் ஆனந்தமும் இழந்து
அனுதினமும் தவிக்கின்றோம்!

சூசையப்பர் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். 077 664 6832

பிரிவால்துயருறும்
குடும்பத்தினர்.

(CS 27539) N.1



# தேவை

கொழும்பிலுள்ள அலுமினிய வேலைத் தளத்திற்கு அலுமினிய வேலை தெரிந்தவர்கள் உடனடியாக தேவை. அலுமினிய வேலை பழக விரும்பு வோர்களும் தொடர்புகொள்ளவும்.

**T.P: 077 8796 620**



# பெண் சுத்திகரிப்பாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் வெதுப்பத்திற்கு பெண் சுத்தி கரிப்பாளர் தேவை. அனுபவ முள்ளவர் விரும்பத்தக்கது.

**077 713 1594, 021 222 9402**

(cs.53400) (N.1)



# காணி விற்பனை

## காங்கேசன்துறை

அபிவிருத்திசெய்துவரும் காங்கேசன்துறை முகத்திற்கு அண்மையில் K.K.S. வீதியை முகப்பாக கொண்ட 22 pearches நிலம் விற்பனைக்கு

- * கடைத்தொதிகள்
- * கொட்டல்கள்
- * கிட்டங்கிகள்
- * சிறந்த வீடுகள் கட்டக்கூடிய சிறந்த சூழல்

1pearch 16,00,000 /=

**076 561 3959**

(cs.27169) (N.1)



# வேலைவாய்ப்பு

யாழ்நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் எனும் புத்தசாலைக்கான வேலைவாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: **077 494 9683**
**077 077 6469**

(cs.53603) (N.1)


# வவுனியாவில் குறையும் டெங்கு

வவுனியா பொது மருத்துவமனையில் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டு 39 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் டெங்குத் தொற்றுத் தாக்கம் குறைவாகவே காணப்படுகிறது. தொற்றுக்குள்ளான 39பேரும் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்குச் சென்று வந்த நிலையிலேயே டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். எனினும் பொதுமக்கள் டெங்குநுளம்புபெருகும் இடங்களை அழித்துடெங்கிலிருந்து தம்மையும், சமூகத்தையும் பாதுகாக்க விழிப்பு டன் செயற்பட வேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தினர். (ச-18)


# மரண அறிவித்தல்



மண்ணில் 04.04.1951

விண்ணில் 03.01.2024

## யோசப் ஜெயராஜன் (ராஜன்)

(ஓய்வுபெற்ற புனித வளனர் கத்தோலிக்க அச்சக - ஒப்பு நோக்குனர்)

தெகிவளையைப் பிறப்பிடமாகவும், இல.65/23, மேற்கு ஒழுங்கை, மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் ஜெயராஜன் (ராஜன்) அவர்கள் கடந்த (03.01.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான V.M.யோசப், ஜேற்றூட் சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் றெஜினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி சறோஜா (ஜெயா)வின் அன்புக் கணவரும், கஜானி (UK), யூட்டனிஸ்ரன் (ஆசிரியர் - மு/அம்பகாமம் அ.த.க. பாடசாலை), நிஜானி (சிற்றி மெடிக்கல்ஸ் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மினோஜ் (UK), ரட்ணகுமார் (சனா கூலிங் இஞ்சினியரிங்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்ரன் (கனடா), ஜெயசீலன் (கனடா), ஜெயானந்தா (யோசப் மாஸ்ரர் - முன்னாள் ஆசிரியர் - புனித [illegible] பாட்டினார் குருமடம்), அருட்சகோதரி பிரான்சிஸ் (திருக்குடும்பக் கன்னியர் சபை - யாழ்ப்பாணம்), ஜெயக்குமார் (கனடா), யோசப்பின் (இளைப்பாறி ஆசிரியர் - யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மேரி ஜெசிந்தா (ஜீவா - செட்டிக்குளம்), மெட்டில்டா (அற்புதம் - செட்டிகுளம்), மேரி பற்றீசியா (ஓய்வுபெற்ற - சமூர்த்தி உத்தியோகத்தர்), மேரி அன்ரனிட்டா (ஆசிரியர் - வட இந்து மகளிர் கல்லூரி - பருத்தித்துறை), அக்னஸ்மாலினி, நிக்சன் சுரேஸ் (R.D.A - செட்டிகுளம்), காலஞ்சென்ற சுபோதினி மற்றும் சுபாஸ்கரன் (கட்டார்), யோண் சுரேந்திரன் (லின்சன்ற் வீரபுரம்), காலஞ்சென்ற வரதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயசீலி (Canada), றீற்றா ஜெயராணி (Canada), காலஞ்சென்ற சுலோஜனா (திரு இருதயக் கல்லூரி - கரவெட்டி), வசந்தி (Canada), ஜெபரட்ணம் (இளைப்பாறிய உப அதிபர்- திருஇருதயக் கல்லூரி, கரவெட்டி) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கிரிஸ்தோப்பர், செல்வராஜ், இராசலிங்கம் மற்றும் அல்பிரட், அரியறஞ்சன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - சக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), மறைவாணன் (பிரதம தபாலகம் - யாழ்ப்பாணம்) அமுதா, அனித்தா, சுபா (ஆசிரியர் - வீரமாணிக்கம் குளம் திருமகள் வித்தியாலயம்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (05.01.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யா/ புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு யா / கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**65/23, மேற்கு ஒழுங்கை,
மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்
076 332 5624**



# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 06.12.2023 புதன்கிழமை இயற்கை எய்திய
எமது குடும்பத் தலைவி

## திருமதி தங்கரத்தினம் நடராசா



மண்ணில் 23.06.1932

விண்ணில் 06.12.2023

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன் தினம் (03.01.2024) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடை பெற்றன. அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.01.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விதானைலேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(cs.53402) (N.1)

பிரிவால்துயருறும்
குடும்பத்தினர்


## புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு

# புதுக்குடியிருப்பு பொதுச்சந்தைக் கடைகளினை நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024

புதுக்குடியிருப்பு சந்தை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான 01 தொடக்கம் 03 வரையான கடைகள் நீண்டகால குத்தகையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரங்கள் வழங்கும் காலம்** :- 05.01.2024 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 19.01.2024. பிற்பகல் 01.30 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)

**கேள்வி திறக்கப்படும் திகதி** :- 19.01.2024. பிற்பகல் 02.00 மணி

| கடை இலக்கம்/ | ஆகக் குறைந்தகேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|
| கடை இல 01 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 02 | ரூபா. 1,440,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 03 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |

1. கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் **தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.** என முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **புதுக்குடியிருப்பு சந்தைக் கடை இல......** என கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்

2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

3. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் தாங்கள் தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.

4. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருப்பதுடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம். **தொலைபேசி இல:- 021 2291 023 email-pkipsmullai@gmail.com.**

**தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
புதுக்குடியிருப்பு பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு.
2024.01.05.**

(CR 41451) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 • 09 • 1956



உதிர்வு 07 • 01 • 2020

அமரர்

### திருமதி மார்க்கண்டு சந்திராதேவி (தேவி)

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: தேய்பிறை நவமி (05.01.2024)

கணவர், பிள்ளைகள், உற்றார், உறவினர் அனைவரும்
போற்ற வாழ்ந்து காட்டிய அன்னையே - நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ - ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்களின் இதயத்தில்
சுடர்விட்டுக்கொண்டிருக்கும் குலவிளக்கே - அம்மா
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எங்களை விட்டுப் பிரியாது.

தவசிக்குளம், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

(CS 27564) (S-1)

குடும்பத்தினர்
(கணவர், மகன், மகள்)


யாழ். போதனாவில் -

# பெண்ணை விரட்டியடித்த பாதுகாப்பு உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நோயாளரைப் பார்வையிடச் சென்ற பெண்ணொருவரிடம் ஒருமையில் விளித்து அநாகரிகமாக ஏசினார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இது தொடர்பாக போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியிடம் முறையிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

மருத்துவமனை விடுதியில் சேர்க்கப்பட்டுள்ள தாயாரைப் பார்வையிடச் சென்ற பெண், உதவிக்கு யாரும் அற்ற நிலையில் பார்வையாளர் நேரம் முடிந்த பின்னர் தேநீர் வாங்கிச் சென்றார் என்றும், அப்போது பாதுகாப்பு உத்தி யோகத்தர் அந்தப் பெண்ணை விரட்டி, ஒருமையில் அநாகரிகமாகப் பேசினார் என்றும் கூறப்படுகின்றது.

மருத்துவமனையில் பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் பெண்கள் தொடர்பான விடயங்களை அவர்கள் கையாளவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மருத்துவமனை நிர்வாகம் அவதானம் செலுத்த வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-125)

# குப்பைகளால் நிரம்பும் பாலம்

இரத்தினபுரம் பாலத்தில் தொடர்ச்சியாகக் குப்பைகள் கொட்டப்படுவதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கிளிநொச்சி நகரக் கழிவுகள் கிளிநொச்சிக் குளத்தை வந்தடையாமல் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட நிலையில், அந்தக் குளத்துக்குப் பெருமளவு நீர் வருகின்ற இரத்தினபுரம் பாலப்பகுதியில் தொடர்ச்சியாக குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-13)


## பெயர் மாற்றம்

சிங்கைநகர் புலோலி தெற்கு புலோலியில் வசிக்கும்
**இராசு கற்கண்டு** ஆகிய நான் எனது பெயரை
**இராசு கஜேந்திரன்** என மாற்றம் செய்வதோடு
இனிவரும் சகல ஆவணங்களிலும் **இராசு கஜேந்திரன்**
என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை
ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs.53401) (N.1)

**இராசு கஜேந்திரன்**



# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.12.2023 அன்று இறைபதம் அடைந்த
எமது பாசமிகு தந்தை

## வல்லிபுரம் இராசநாயகம்

(Lorry body builder)

அப்பா!
மீண்டும் வாராயோ
அறமுரைத்தாய் அன்புரைத்தாய் அனைவரையும்
ஆதரித்தாய் வாழவும் வைத்தாய்
திறனுடைத்தாய்
தீர்க்கமும் உரைத்தாய்
தீயனவெல்லாம் களையவும் வைத்தாய்
மனைவி பிள்ளை சுற்றமெலாம் சேர வைத்தாய்
காத்திருந்தாய் ஏற்றமும் பெறவைத்தாய்
நற்குணமுடைத்தாய்
எமையெலாம் ஏன் பிரிந்தாய்
கூடி வாழ்வோம் இங்கே மீண்டும் வாராயோ

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (06.01.2024) சனிக்கிழமை அதிகாலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், சபிண்டீகரண கிரியைகள் நாளை மறுதினம் (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்தி ஈடேற்றத்திற்கு பிரார்த்திக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**இராசநாயகம் (Lorry body builder)**
**கட்டைவேலி,**
**கரவெட்டி கிழக்கு.**

பிரிவால்துயருறும்
**குடும்பத்தினர்**
**077 355 1037, 077 563 1384**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறல்களில் இலங்கை பின்னடைவு

## மன்னிப்புச்சபை வலியுறுத்து

கொழும்பு. ஜன. 5
இலங்கையில் உள்நாட்டு போர் முடிவடைந்து பதினைந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், மனித உரிமை மீறல்களுக்கும் மனிதாபிமான சட்ட மீறல்களுக்குமான பொறுப்புக்கூறல் உள்நாட்டுப் பொறிமுறையின் கீழ் மிக அரிதாகவே காணப்படுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.
2006ஆம் ஆண்டு திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டமைக்கு நீதி இன்னமும் வழங்கப்படாதமை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் உள்ளதாவது:-
இந்தக் கொலைச்சம்பவம் தொடர்பாக 13 விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நிலையில் 2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்த வழக்கில் போதிய சாட்சியங்கள் இல்லையென நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் சட்டமா அதிபர் திணைக்களம் இந்த வழக்கை மீள்விசாரணை செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது. எனினும் இதுவரை எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. உள்நாட்டு போர் முடிவடைந்து பதினைந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், மனித உரிமை மீறல்களுக்கும் மனிதாபிமான சட்ட மீறல்களுக்கும் பொறுப்புக்கூறல் உள்நாட்டு பொறிமுறையின் கீழ் மிக அரிதாகவே காணப்படுகின்றன - என்றுள்ளது. (ம-6)

## NP HD 9596 இலக்க லொறி விற்பனைக்கான கேள்விக் கூறுவிலை கோரல் விளம்பரத் திருத்தம் தொடர்பானது

04.01.2024 திகதி உதயன் பத்திரிகையில் 10 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட எமது சங்க லொறி விளம்பரத்தில் வாகன இலக்கம் **NP HD 9596** என்பதற்குப் பதிலாக **NP GF 9596** என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. எனவே இதனை **NP HD 9596** என திருத்தியமைக்கப்படுவதை அறியத்தருகின்றோம்.
பொது முகாமையாளர்
வலி. கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
அச்சுவேலி.
(CR 41454) A-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10 . 05 . 1950

மறைவு
17 . 12 . 2023

சுழிபுரம் மேற்கை பிறப்பிடமாகவும்
சுழிபுரம் கிழக்கை
வசிப்பிடமாகவும் கொண்ட

### இராசையா இராசதுரை

ஆண்டுகள் ஒன்று ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை - என்றும்
உம் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்
இன்று வேண்டித்துதித்தே இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். குடும்பத்தினர்.
(CS 53333) A-1

## கிணற்றுக்குள் வீழ்ந்து மூதாட்டியொருவர் [illegible]

யாழ்ப்பாணம், ஜன. 5
கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளுவதற்கு [illegible]ட்ட மூதாட்டியொருவர், கால்தவறி வீழ்ந்ததில் உ[illegible]ழந்தார். இந்தத் துயரச் சம்பவம் நேற்று இ[illegible]பற்றுள்ளது.
அராலி மேற்குப் பகுதியைச் சேர்ந்த மூதாட்டி[illegible] இவ்வாறு உயிரிழந்தவராவார். மரண விசாரணை[illegible]ளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெய[illegible]சிங்கம் மேற்கொண்டார். [illegible]-27)

## கடற்றொழிலுக்குச் சென்றவர் சுகவீனமுற்று உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 5
யாழ்ப்பாணம், குருநகர் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்காகச் சென்றவர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். அமரசூரி அன்ரன் யூட் (வயது-42) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
இன்னும் இரண்டு பேருடன் இணைந்து கடற்றொழிலுக்காகச் சென்ற அவருக்கு நேற்று அதிகாலை திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து உடனடியாக கரைக்கு அழைத்து வரப்பட்ட அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## தூக்கில் சடலமாக சிப்பாய் மீட்பு!

மன்னார், ஜன. 5
மன்னார், முசலி பிரதேச செயலர் பிரிவிலுள்ள முள்ளிக்குளம் கடற்படை முகாமில் கடமையாற்றும் சிப்பாய் ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கடற்படை முகாமுக்கு அருகில் உள்ள காட்டுப்பகுதியிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டார்.
33 வயதான கடற்படைச் சிப்பாய் கடந்த இரண்டாம் திகதி மதியம் கடற்படை முகாமிலிருந்து வெளியில் சென்ற நிலையில் மீண்டும் முகாமுக்குத் திரும்பாத நிலையிலேயே நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இறப்புத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-56-213)

## மரண அறிவித்தல்



பிறப்பு
02 . 11 . 1956

இறப்பு
04 . 01 . 2024

### இரட்ணசிங்கம் நரேந்திரன்

(முன்னாள் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன்,
கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட வெளிவாரி மாணவன்)

யாழ்ப்பாணம் புலோலி தெற்கு, உபயகதிர்காமம், கந்தமுருகேசனார் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரட்ணசிங்கம் நரேந்திரன் அவர்கள் கடந்த (03.01.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியர் பரமு இரட்ணசிங்கம், திருமதி இரட்ணசிங்கம் சிவபாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், திருமதி சிவமணி ஸ்ரீஸ்கந்தராஜா (தங்கம் - லண்டன்), காலஞ்சென்ற இரட்ணசிங்கம் இராசேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆணைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(CS 27566) A-1

## திருகோணமலையில் 61 குதங்கள் குத்தகைக்கு

திருகோணமலை, ஜன. 5
திருகோணமலை சீனன்குடாவிலுள்ள 99 எண்ணெய்க் குதங்களில் 61 குதங்களை திருகோணமலை முனைய நிறுவனத்துக்கு 50 வருட குத்தகைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
இந்தக் குதங்கள் 16 வருட காலப்பகுதியில் 7 கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. முதற் கட்டமாக ஒன்பது குதங்களிலிருந்து 1.75 கிலோமீற்றர் தூரத்துக்குக் குழாய்கள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
கடந்த திங்கட்கிழமை அமைச்சரவை இந்தத் திட்டத்துக்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேசிய மட்டத்தில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான mini throwball போட்டியில் பங்கேற்ற வவுனியா பன்றிக்கெய்தகுளம் அ.த.க. பாடசாலையின் 13 வயதுப் பிரிவு ஆண்கள் அணி வெற்றிபெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (ச-75)





அராலி கிழக்கு கிராமத்தில் பொதுமக்கள் தன்னார்வமாக டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியை அண்மையில் முன்னெடுத்தனர். இதில் நூறுக்கும் மேற்பட்டோர் பங்கேற்று ஒவ்வோர் இடமாக கழிவுப் பொருள்களைச் சேகரித்து பிரதேச சபையிடம் ஒப்படைத்தனர். (ச-125)





இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் வருடாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு கடந்தசனிக்கிழமை நாவற்குழியிலுள்ள பிரசித்திபெற்ற திருவாசக அரண்மனையில் இடம்பெற்றது. சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ச-66-159)

இருபாலை கற்பகப் பிள்ளையார் முன்பள்ளிச் சிறார்களின் மழலைகள் கலைவிழா அண்மையில் இருபாலையில் அமைந்துள்ள முழுமதி சனசமூக நிலைய அரங்கத்தில் முன்பள்ளி முகாமைத்துவத் தலைவி திருமதி வெ.அமிர்தாம்பிகை தலைமையில் சிறப்புற நடைபெற்றது. விழாவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ம-66)



மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளராக சேவையாற்றி மன்னார் உதவி மாவட்டச் செயலராக (காணி) நியமனம் பெற்றுள்ள மா.சிறிஸ்கந்தகுமாரை மன்னார் றோட்டரிக் கழகத்தினர் அண்மையில் சந்தித்துக் கௌரவித்தனர். (ச-213)



வடக்கு - கிழக்கு கிராமங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு நிவாரணப் பொதிகள், மருத்துவக் கலாநிதி கந்தையா மோகனரூபன் அனுசரணையில் கையளிக்கப்பட்டன. தமிழ்விருட்சத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் பி.ஏ.சரத்சந்திர மற்றும் மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஷ்குமார் ஆகியோர் பங்கேற்று உலர் உணவுப் பொதிகளைக் கையளித்தனர். (ச-110)



முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இருட்டு மடு கிராமத்தைச் சேர்ந்த 25 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் புலம்பெயர் நாடான சுவிஸ் நாட்டில் இருக்கும் ஈசன் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில் உடையார்கட்டு வடக்கு கிராம அலுவலர் பிரிவில் கிராம சேவையாளர் உ.நாமிலா தலைமையில் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்தன் கலந்து கொண்டு உலருணவுப்பொதிகளை வழங்கினார். (ரி-19)



முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பண்டாரக்குளத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வரும் முதியவரொருவரின் குடும்பத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய தாய்த்தமிழ்பேரவை அமைப்பின் ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்பாளர் இ.சத்தியசீலனின் ஏற்பாட்டில் மாதாந்தம் உணவுப்பொருள்கள் வழங்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-13)





முல்லைத்தீவு, முள்ளியவளை வடக்கு நாவற்காடு வீதி அண்மையில் சீரமைக்கப்பட்டுள்ளது. சுமார் 400 குடும்பங்களின் தினசரிப் பாவனைக்குரியதாக இந்த வீதி உள்ளது. நீண்டகாலமாகச் சீரமைக்கப்படாதிருந்த இந்த வீதி மக்களின் தொடர்ச்சியான கோரிக்கையின் விளைவாக, தற்காலிக அடிப்படையில் சீரமைக்கப்பட்டுள்ளது. (ம-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்மானி வாசிப்பாளர்கள் போன்று பாசாங்கு செய்து கொள்ளையிட்டோர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 5
மின்மானி வாசிப்பாளர்கள் போன்று பாசாங்கு செய்து, வீட்டுக்குள் நுழைந்து தாலிக்கொடியைக் கொள்ளையிட்ட இரண்டு சந்தேகநபர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வல்லைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த 27ஆம் திகதி இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது. தேன் விற்பவர்கள் போன்று வந்த இருவர் வீட்டுக்குள் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்துள்ளனர். பின்னர் மின்மானி வாசிப்பதுபோன்று பாசாங்கு செய்து வயோதிபப் பெண் அணிந்திருந்த தாலிக்கொடியைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டிருந்த நிலையில், பொலிஸ் பரிசோதகர் சேந்தன் தலைமையிலான குழுவினர் சந்தேகநபர்களை நேற்றுக் கைது செய்தனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-23-100-26)

கடல் வழியாக

# இலங்கைக்கு இந்தியர்கள் ஆன்மீகச் சுற்றுலா வருவர்

## மே மாதம் ஆரம்பம்

இந்தியர்கள் இலங்கையில் உள்ள தொன்மை வாய்ந்த வழிபாட்டுத் தலங்களுக்கு, கடல் மார்க்கமாக ஆன்மீகச் சுற்றுலா செய்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மன்னார் - கேதீச்சரம், காங்கேசன்துறை - நகுலேஸ்வரம், திருகோணமலை - திருக்கோணேஸ்வரம் ஆகியவற்றை மையப்படுத்தியே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதம் முதல் இது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ரணில் மேலும் தெரிவித்தார். (ம-125)

# ரணிலை எதிர்த்து போராட்டம் முன்னணியினர் மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 5
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு எதிராக முன்னணியினர் நேற்றுப் போராட்டம் நடத்தினர். யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்துக்கு அருகில் போராட்டம் நடத்த எத்தனித்த மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணிலின் வருகைக்கு எதிராக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் இணைந்து போராட்டத்தை நடத்தினர். இந்த நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு அருகில் போராட முற்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணித் தலைவர் இ.சத்திய சீலன், கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் பொன் மாஸ்டர் மற்றும் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் அருள்மதி ஆகிய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். (அ-ம-66)

### பலாலிக்...

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வைத்தே இவ்வாறு தெரிவித்தார்.

பலாலியில் விடுவிக்கப்படாதுள்ள பல ஏக்கர் காணிகள் தொடர்பிலும், தீர்க்கப்படாத காணிப் பிரச்சினைகள் தொடர்பிலும் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டது. இதன்போதே சுமார் 290 ஏக்கர் வரையான விவசாய நிலங்களை உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ரணில் பணித்தார். அத்துடன், பலாலி விமான நிலையம் மற்றும் பாதுகாப்புத் துறைக்கு பலாலியில் தேவைப்படும் காணிகள் தொடர்பிலும் பெப்ரவரியில் இறுதி முடிவெடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-ம-26-66-125)

### இடம்பெயர்ந்தோர்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு நாள்கள் சுற்றுப் பயணமாக வடக்கு மாகாணத்துக்கு நேற்று வருகை தந்தார். நேற்று மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தோர் 'பிரச்சினைக்குத் தீர்வுகாண அவசர வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிக்கவேண்டும். இந்தப் பிரச்சினையை இவ்வாறு தொடர்ந்துகொண்டுபோக அனுமதிக்கமுடியாது. 2025 ஆம் ஆண்டுக்குள் இடம்பெயர்ந்தோர் பிரச்சினைகள் முற்றாக இல்லாமற்செய்யப்பட்டு அவர்களின் உயிர்வாழும் உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும். வடமாகாண அபிவிருத்திக்கு அவசியமானதிட்டமிடலைத் தயாரித்து துரித அபிவிருத்திக்கான பயணத்தில் இணைந்து கொள்ளுமாறு வடக்கு மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்' - என்றார்.

பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன, மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்த்தன, தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வடக்கு மாகாணத்துக்கான ஜனாதிபதியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் எம்.இளங்கோவன், ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, ஜனாதிபதியின் சமூக அலுவல்கள் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் றூபவதி கேதீஸ்வரன் ஆகியோரும் இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-26-66-125)

### காவலர்கள்...

ஆதரவை பெறும் சூழ்ச்சி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் - என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு பயங்கரமான நிலையை எதிர்கொண்டுள்ளது. இதற்கு முன்னர் இவ்வாறானதொரு நிலைமையை எதிர்கொள்ளவில்லை. ஜனாதிபதியின் படமொன்று அண்மையில் ஊடகத்தில் வெளியானது. ஒரு புறத்தில் பிக்குகள் எனக் கூறிக்கொள்ளும் சிலர் இருந்தனர். மறுபுறத்தில் உலகத் தமிழ் பேரவை உறுப்பினர்கள் இருந்துள்ளனர்.

இமயமலைப் பிரகடனம் எனக்கூறி பிரகடனமொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஆறு யோசனைகள் உள்ளன. இலங்கையை சமஷ்டி நாடாக்கி, அதன் மூலம் ஈழத்தை அடைவதே அதன் நோக்கமாகும். அவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் மகாநாயக்க தேரர்களையும் சந்தித்துள்ளனர். அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும் பேச்சு நடத்தியுள்ளனர். அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் இமயமலைப் பிரகடனத்துக்கு இணக்கம் என்ற தகவலை தற்போது அவர்கள் பரப்பி வருகின்றனர்.

தமிழ்ப் பிரிவினைவாதிகளின் தேவைக்கேற்ப இந்நாடு சமஷ்டி நாடாக மாறாமல் இருப்பதற்கு பிக்குகளே காரணம். நாட்டை அவர்கள் பாதுகாத்துவருகின்றனர். நாடு பிளவுபடுவதற்கு எதிராக மகாசங்கத்தினரே செயற்பட்டனர். ஒற்றையாட்சியைக் காக்க அவர்கள் பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளனர். மன்னர் காலத்திலும் அவ்வாறு நடந்துள்ளது.

13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த முடியாமல் இருப்பதற்கும் பிக்குகளின் அழுத்தமே காரணம். இதனைத் தெரிந்துகொண்டுதான் பிக்குகள் சமூகம் தற்போது இலக்கு வைக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

### வடக்கில்...

வடக்கின் வலுசக்தியைப் பாதுகாத்து, வலுசக்தி ஏற்றுமதி செய்வதற்கு அவசியமான அனைத்துத் திட்டமிடல்களும் காணப்படுகின்றன. பூநகரியை வலுசக்தியின் கேந்திர நிலையமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் வடக்கின் விவசாயத்துறையை விவசாய நவீனமயப்படுத்தலுக்குள் உள்வாங்கி அதிலிருந்து பெறப்படும் பலன்களை இரட்டிப்பாக்கிக்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

வடக்கின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்கான இரு திட்டங்களுக்கு இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டங்களுக்குச் செலுத்தப்பட வேண்டியிருந்த கொடுப்பனவுகளைப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம-26-125-66)

### அரச...

நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியை அனுபவிக்கின்றனர் என்பதை நான் அறிவேன். நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்திய பின்னர் மக்களுக்கு உரிய பொருளாதார நிவாரணங்களை வழங்கியே தீருவேன். பொங்கல் கொண்டாட்டங்களின் பின்னர் அரச அலுவலர்களுக்கு ஓரளவான பொருளாதார நிவாரணங்கள் கிடைக்கப்பெறும்.

கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்த்திருத்தத்தின் காரணமாக நிலுவையிலிருந்து அனைத்துக் கடன் பத்திரங்களும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன. அடுத்த நான்கு காலாண்டுகளில் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோல், இவ்வருட இறுதிக்குள் பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3 வீதமாக மேம்படுத்தவும், 2025ஆம் ஆண்டில் 5 வீதமாகவும் அதிகரித்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-26-125-66)

### ரணிலின்...

நேற்றுமுன்தினம் இரவிலிருந்து பொலிஸாரின் பாதுகாப்பு வளையத்துக்குள் யாழ்ப்பாணம் நகரப் பகுதி கொண்டுவரப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ரணில் கலந்துகொள்வதற்கு முன்னதாக, அந்தப் பகுதியில் வெடிகுண்டுகளை அடையாளம் காணும் கருவிகளுடன் சிறப்புப் படையணி சோதனையில் ஈடுபட்டது. யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியில் உள்ள வீடுகளின் அண்மையாகவும் மதில் ஓரங்களிலும்கூட இந்தச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-26-125-66)

### வடக்கிலிருந்து...

3 ஆயிரத்து 255 தனியார் பரீட்சார்த்திகளும் தோற்றியுள்ளனர். வடக்கில் 141 பரீட்சை நிலையங்களும், 49 பரீட்சை இணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

### ரணில்...

கடந்த முறை ஜனாதிபதி வவுனியாவுக்கு வருகைதந்தபோது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டணம் குறைகின்றது

கொழும்பு, ஜன. 5
மின்கட்டணத்தைக் குறைப்பதற்கான தீர்மானத்தை விரைவில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.
நீர்மின்சாரம் தற்போது தாராளமாகக் கிடைப்பதால், மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்று பல தரப்பினரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தனர். இந்த நிலையிலேயே, மின்சாரக் கட்டணக் குறைப்புக்கான தீர்மானம் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று அமைச்சர் காஞ்சன தெரிவித்தார். (அ-ம-6)

## நாமம் சூட்டுதல்

கொடிகாமம், ஜன. 5
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் பிரதான மண்டபத்துக்கு சரஸ்வதி கலையரங்கம் என நாமம் சூட்டும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சு. பரமானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் திருமதி மீனா சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-159)

## நிர்வாகக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 5
அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.கா. கமலநாதன் தலைமையில் இணுவில் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.
இக்கூட்டத்தில் சைவமாநாடு, பட்டமளிப்பு விழா, ஆய்வுக்கட்டுரை முன்வைப்பு, சைவநாதம் மலர் வெளியீடு, 2024 ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளம் சைவப்புலவர் தேர்வுகள், சிவதீட்சை வழங்குதல் போன்ற முக்கியமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளன. (ம)

## திருவாசகம் முற்றோதல்

யாழ்., ஜன. 5
அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் திருவாசக முற்றோதல் நிகழ்வு அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமப் பசுபதீஸ்வரர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணி முதல் இடம்பெறவுள்ளது. (ச-66)

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 386 6250

**வேலையாட்கள் தேவை**

முறுகண்டியில் அமைந்துள்ள உணவகத்திற்கு, சமையல்காரர், சமையல் உதவியாளர், உணவு பரிமாறுபவர் போன்ற வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

தொடர்பு: 077 3866 250

**மின்சார துவிச்சக்கர வண்டி விற்பனைக்குண்டு**

மின்சாரத்தில் இயங்கும் துவிச்சக்கர வண்டிகள் யாழ்நகரில் ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் என்னும் நிறுவனத்தில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 494 9683
077 077 6469

**சிறிராம் ஜுவல்லர்ஸ்**

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கு இணங்க எதிர்வரும் தைபொங்கல் தினத்தை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்



* 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களையும் 16.01.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
* அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை ஊறுதிசெய்யும் தரச்சான்றும் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாளிற்கான விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

சிறிராம் ஜுவல்லர்ஸ்
22 கரட் தங்க நகைகளின் சாம்ராஜ்ஜம்

தொடர்பு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 02.11.1956 இறப்பு 04.01.2024

**இரட்ணசிங்கம் நரேந்திரன்**



பல்துறைகளில் கால் பதித்த
பரந்தறிவு கொண்ட
நல்லவன் நரேந்திரனே!

மனமுவந்து உதவுவதில் - நீ
மண்ணுலகில் மாமனிதன்தான்
கூடியிருந்த இடத்தைக்
குதூகலிக்க வைப்பதில் - நீ
நகைச்சுவை நாயகன்தான்.

இவ்வுலகை நீத்தாலும்
எம்முடன் கலந்த நாட்களில் - நீ
தந்த நினைவுகள்
என்றென்றும் நீங்காது.

நியூ சயன்ஸ் வேல்ட் - கல்விச் சமூகம்
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 05 . 1949



இறப்பு 03 . 01 . 2024

**கந்தையா வர்ணகுலசிங்கம் (குலம்)**

இல. 09, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், நிரந்தர முகவரியாகவும், இல.281, வைத்தியசாலை முன் வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சியை தற்காலிக வதிவிடமாகவும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவனுமாகிய கந்தையா வர்ணகுலசிங்கம் (குலம்) காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அண்ணாமலை யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நீலாம்பிகையின் பாசமிகு கணவரும், ராஜசிங்கம், சிவசாயி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோகிலன் (கனடா) அவர்களின் அன்பு மாமனாரும், யுவாணிகாவின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், பரமேஸ்வரி மற்றும் இராசலட்சுமி, காலஞ்சென்றவர்களான பத்மநாதன், செல்வலிங்கம் மற்றும் இராஜேஸ்வரி, சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பெருமாள், நாகராஜா, கனகரத்தினம் மற்றும் யோகலட்சுமி, தனபாக்கியலட்சுமி, யோகரெட்ணம், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் தவமணிதேவி, மோகனதாஸ், செல்வராணி, இந்திராணி, பாலச்சந்திரன், அருள்யோகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராசசிங்கம், அருள்கணராசா, சுபத்திரா, சத்தியகுமாரன், ரவிதாஸ், ஈஸ்வரி, தயாளினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் (இல.281, வைத்திசாலை வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சி) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே: 077 997 2524
077 3024 107

தகவல்:
குடும்பத்தினர்.

**வேலைவாய்ப்பு**

1. Graphic Designer
(கிராப்பிக் டிசைனர்)
ஆண் / பெண் இருபாலாரும்
பகுதி நேரம் / முழுநேரம்



மேற்குறிப்பிட்ட பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ளவர்கள் நாளை (06.01.2024) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை உங்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகமதரவும்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



வீமன்காமம் K.K.S. வீதி தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், கீரிமலை வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை மற்றும் (இல.46 சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

**சறோஜா சற்குணசிங்கம்**

தோற்றம் 14.09.1951 மறைவு 06.12.2023

எமது குடும்பத் தலைவி அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்தும் தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

46, சம்பியன்லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்
077 715 0356
077 990 0041
077 523 4993

(cs.27575) N.1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org